# சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

- தமிழ்நாட்டில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளில் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு பணிகளை உடனடியாக கண்டறிந்து அதனை செயல்படுத்துவதற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிக்கு தேவையான கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை கண்டறிந்து அப்பணியினை இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்த பரிந்துரை செய்யவேண்டும்.
- இத்திட்டம், சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கிராமப்புற பகுதிகளான ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிலும் மற்றும் நகர்புற பகுதிகளான பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சி ஆகிய அனைத்து இடங்களிலும் மேற்கொள்ளப்படுகிறது.
- ஒரு சட்டமன்ற தொகுதிக்கு 2019-20 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் தலா ரூ. 2.50 கோடியிலிருந்து 3.00 கோடியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- மொத்த நிதியில் 21 சதவீதம் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.
- ரூ. 3.00 கோடியில் "வரையறுக்கப்பட்ட கூறு நிதியாக" ரூ.1.50 கோடிக்கு முன்னுரிமை பணிகளை கட்டாயமாக எடுத்து செய்ய வேண்டும்.
- ரூ. 3.00 கோடியில் "வரையறுக்கப்படாத கூறு நிதியான" ரூ. 1.50 கோடிக்கு தடை செய்யப்பட்ட பணிகள் தவிர எந்த பணிகளையும் மேற்கொள்ளலாம்.
- 

வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் செய்ய வேண்டிய பணிகள்
(ரூ. 1.50 கோடி)

❖ <u>பள்ளி உட்கட்டமைப்பு வசதிகள் - ரூ. 25.00 இலட்சம்</u>

- அரசு பள்ளிகளான ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி , நடுநிலைப்பள்ளி மற்றும் நகராட்சி, மாநகராட்சி பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தலாம்.
- பள்ளிகளில் குடிநீர் விநியோகம், கழிப்பறைகள், வகுப்பறைகள் , நூலகங்கள், ஆய்வு கூடங்கள், சுற்றுசுவர் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளலாம்.

❖ <u>பள்ளிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் அமைத்தல் - ரூ. 20.00 இலட்சம்</u>

- அரசு பள்ளிகளான மாநகராட்சி / நகராட்சி / ஊராட்சி ஒன்றியம் / ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் மாணவ மாணவியர்க்கு சுத்தமான மற்றும் சுகாதாரத்துடன் கூடிய குடிநீர் வழங்கும் பொருட்டு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் வழங்கும் பணிகள் மேற்கொள்ளலாம்.

❖ <u>அங்கன்வாடி / சத்துணவு மைய கட்டடங்கள்- ரூ. 20.00 இலட்சம்</u>

- அங்கன்வாடி , சத்துணவு கட்டடங்களில் பராமரிப்பு பணிகள் (அ) புதிய கட்டடங்கள் கட்டுதல், சமையலறைகளுக்கு எரிவாயு இணைப்பு வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம்.

- மேற்கண்ட பணிகள் ஏதும் செய்யத் தேவையில்லாத பட்சத்தில் மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோரிடமிருந்து உரிய சான்று பெற்று இதே வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை விருப்பத்தின் அடிப்படையில் செய்யலாம்.

❖ <u>குடிநீர் பணிகள்- ரூ. 30.00 இலட்சம்</u>

- கோடைகாலத்தில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையை தணிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளலாம். குடி நீர் ஆதாரத்தை பெருக்குதல் மின் விசை இறைப்பான் சிறுமின் விசை இறைப்பான் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல், ஆழ்துளை கிணறு ஆழப்படுத்துதல், புதிய கைப்பம்பு அமைத்தல், திறந்தவெளி கிணறு அமைத்தல் மற்றும் ஆழப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம்.

❖ <u>இதர பணிகள் - ரூ. 55.00 இலட்சம்</u>

- வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் ரூ. 55.00 இலட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் தமது விருப்பத்தின் அடிப்படையில் கீழ்கண்டுள்ள பணிகளில் ஒன்று (அ) அதற்கு மேற்பட்ட பணிகளை ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் மேற்கொள்ளலாம் :-
  - சரளை / கப்பி சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்.
  - மிகவும் பழுதடைந்த தார் சாலைகளை புதுப்பித்தல்.
  - சிமெண்ட் கான்கிரிட் சாலைகள் அமைத்தல்.
  - பாலங்கள் கட்டுதல்.
  - பொது விநியோக கடை கட்டுதல்.
  - பெண்கள் / ஆண்கள் சுகாதார வளாகம் கட்டுதல்.
  - இடுகாடு / சுடுகாடு அமைத்தல்.
  - உடற்பயிற்சி கூடம் கட்டுதல் / உபகரணங்கள் வழங்குதல்.
  - சூரிய ஒளி சக்தி - தெருவிளக்குகள் மற்றும் அரசு கட்டட கூரை மீது நிறுவுதல்.
  - வக் ஃப் வாரியத்தின் இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் (அ) கம்பி வேலி அமைத்தல்.
  - மாற்று திறனாளி பள்ளிகள் / அரசு ஆதரவற்றோர் விடுதிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்.
  - அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், கால்நடை மருத்துமனைகள், அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளிகள், அரசு பாலிடெக்னிக்குகள், அரசு கல்லூரிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் , அரசு தங்கும் விடுதிகள் ஆகியவற்றிக்கு கட்டடம் (அ) சுற்றுசுவர் கட்டி கொடுத்தல்.
  - நகர்புற பகுதிகளில் கான்கிரிட் நடைபாதைகள் , பொது பூங்காக்கள் அமைத்தல், ஹைட்ராலிக் தூர்வாரும் இயந்திரங்கள் வாங்குதல், தெருவிளக்குகள் அமைத்தல் போன்றவைகள் மேற்கொள்ளலாம்.

❖ <u>வரையறுக்கப்படாத கூறு நிதியில் செய்யக்கூடிய பணிகள் (ரூ. 1.50 கோடி)</u>

  - வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் எடுத்து செய்யக்கூடிய அனைத்து பணிகளையும் இந்தக் கூறு நிதியில் செய்யலாம்.

- இக்கூறு நிதியில் சில பணிகள் தடை செய்யப்பட்ட பணிகளாக பட்டியலிடப்பட்டுள்ளன.
- இக்கூறு நிதியில் சில பணிகள் மேற்கொள்ள விதி விலக்கு வழங்கப்பட்டுள்ளன.

❖ வரையறுக்கப்படாத கூறு நிதியில் செய்யக்கூடிய பணிகள்

- வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் எடுத்து செய்யக்கூடிய அனைத்து பணிகளையும் இந்தக் கூறு நிதியில் செய்யலாம்.
- விவசாய நேரடி கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க கட்டடங்கள், குளிர்பதன மையங்கள் கட்டலாம்.
- சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களில் சுற்று சுவர் கட்டாமலிருப்பின் அப்பணியினை மேற்கொள்ளலாம்.
- இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம் வழிகாட்டுதலின்படி பேரூராட்சிகளில் மட்டும் புதிய வீடுகள் கட்டுதல்.
- இந்திரா நினைவு குடியிருப்பு, தாட்கோ, குடிசைமாற்று வாரிய வீடுகளில் ஒரு வீட்டிற்கு ரூ. 50,000/. க்கு மிகாமல் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளலாம்.
- அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், கால்நடை மருத்துமனைகள், அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளிகள், அரசு பாலிடெக்னிக்குகள், அரசு கல்லூரிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் , அரசு தங்கும் விடுதிகள் ஆகியவற்றுக்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கி வழங்குதல் (தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998- ன்படி மேற்கொள்ள வேண்டும்).
- மாற்று திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ. 5.00 இலட்சம் (அ) அதற்கு மேலான மதிப்பிற்கு வழங்குதல்.
- போலியோ மற்றும் மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு கற்பிக்கும் கருவிகள் வழங்குதல்.
- உடற்பயிற்சி கூடம் (மூலஅ) கட்டுதல் / உபகரணங்கள் வழங்குதல்.
- அரசு கட்டடங்களுக்கு சூரிய ஒளி சக்தி கலன்கள் நிறுவுதல்.
- பயணிகள் நிழற்குடை அமைத்தல்.

❖ வரையறுக்கப்படாத கூறு நிதி - தடை செய்யப்பட்ட பணிகள்

- மத்திய அரசு, மாநில அரசு, பொதுத்துறை, கூட்டுறவு போன்ற நிறுவனங்களுக்கு கட்டடங்கள் கட்ட இயலாது.
- தனிநபர் / குடும்ப பயனுக்காக சொத்துக்களை உருவாக்க இயலாது.
- புதுப்பித்தல் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள இயலாது.
- அசையும் பொருட்கள் , உபகரணங்கள் மற்றும் தளவாட சாமான்கள் வாங்கக் கூடாது.
- அரசு உதவிபெறும் / சுயநிதி பள்ளிகள் , பாலிடெக்னிக்குகள் மற்றும் கல்லூரிகளில் எவ்வித பணிகளையும் மேற்கொள்ள இயலாது.

- வணிக நிறுவனங்கள் / தொழிற்சாலைகளில் பணிகள் மேற்கொள்ள கூடாது.
- கடன் மற்றும் மான்யம் மத்திய / மாநில / யூனியன் பிரதேச நிவாரண நிதிக்கு பங்களித்தல் கூடாது.
- நில எடுப்பு / நில எடுப்பு ஈட்டுத் தொகை போன்றவை வழங்க கூடாது.
- ஏற்கனவே முழுமையாக / பகுதியாக கட்டப்பட்ட பணிகளுக்கு தொகை செலுத்துதல் கூடாது.
- அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள் மேற்கொள்ள இயலாது.
- மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான இடங்கள் / வழிபாட்டு தலங்களில் பணிகள் மேற்கொள்ள இயலாது.
- குட்டைகள் / ஊரணிகள் / ஆறுகள் / குளங்கள் / கால்வாய்கள் / வாய்க்கால்கள் தூர் வாருதல் கூடாது.
- சரளை / கப்பி சாலைகள் அமைக்க இயலாது.
- உயர் கோபுர மின்விளக்கு பொருத்த இயலாது.










District name : Salem
Constituency Name : Omalur MLA
Village : T.Maramangalam
Block : Omalur
Year : 2018-2019.
Work name : Construction of public distribution Shop for T.Maramangalam in Tholasampatty in Omalur Taluk of Salem District
Estimate amount : 9.75 lakhs.



District name : Salem
Village : Vellalapuram,
Year : 2018-2019
Work name : Construction of community hall in Arundhadhiyar colony Mettupalayam, Vellalapuram at konganapuram union in salem District.
Estimate amount : 22.40 lakhs.
Constituency Name : Edappadi MLA,
Block : Konganapuram

❖ சேலம் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகள் விபரம்.
சட்டமன்ற தொகுதிகள் - 11

81. கெங்கவல்லி (தனி)

82. ஆத்தூர் (தனி)

83. ஏற்காடு (தனி)

84. ஓமலூர்

85. மேட்டூர்

86. எடப்பாடி

87. சங்ககிரி

88. சேலம் மேற்கு

89. சேலம் வடக்கு

90. சேலம் தெற்கு

91. வீரபாண்டி